# சங்க இலக்கியங்களின் வழி அறியலாகும் பயிரினப் பயன்பாடுகள்

**ம.மாதவி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாத்திமா கல்லூரி
மதுரை

**மலர்:** 3
**இதழ்:** 2
**தொகுதி:** 1
**மாதம்:** அக்டோபர்
**வருடம்:** 2018
**ISSN:** 2454-3993

## தோற்றுவாய்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் பண்டையத் தமிழர்கள். இவர்கள், தம் வாழ்வினை அகமென்றும், புறமென்றும் பகுத்து வாழ்ந்தனர். அகவாழ்வென்பது, காதல் வாழ்வாகும். புறவாழ்வென்பது வீர வாழ்வாகும். இவ்விருவாழ்விலும், தமிழர்களுக்குப் பயிரினங்கள் அதிக அளவில் பயன்பட்டுள்ளன. உலகில் நீர் வளத்திற்கு அடுத்தப்படியாக கூறப்படும் வளம் பயிரின வளமாகும். பயிரினங்கள் சங்கத்தமிழரின் வாழ்வில் எல்லாமாகவும் விளங்கிச் சிறக்கின்றன. ஆகையால்தான் சங்கத்தமிழர் தாம் வாழும் நிலங்களுக்கு குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் எனப் பூக்களின் பெயர்களைச்சூட்டி மகிழ்ந்துள்ளனர். சங்கத்தமிழர் வாழ்வில் பயிரினங்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை, சங்க இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உணவு

சங்க காலம் முதல் இன்றுவரை உணவாகத் தாவரங்கள் பயன்பட்டு வருகின்றன. இவ்வியற்கை உணவுகள் உடலின் நலன் காப்பவையாகவும் கருதப்படுகின்றன. உணவு பற்றிய தகவல்கள் பெரும்பாலும் ஆற்றுப்படை நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன வறுமையில் வாடியோர் வளம் பெற, வளம் பெற்றவர்கள், தாங்கள் வளம் பெற்ற வழியினை எடுத்துரைக்கின்றனர். அவ்வாறு உரைக்கும்போது உணவு சிறப்பிடம் பெறுகின்றது.

> **“குறுங்காழ் உலக்கை ஓச்சி நெடுங்கிணற்று**
> **வல்லூற்று உவரி தோண்டித் தொல்லை**
> **முரவு வாய்க் குழிசி முரியடுப்பு ஏற்றி**
> **வாராது அட்ட வாடூன் புழுக்கல்.......”**
>
> **(பெரும்பாணாற்றுப்படை 97 – 100)**

என வரும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பாடல் வரிகளில், சங்ககாலத்தில் அரிசியைச் சமைக்கும் முறையினைப் பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது. நெல்லைக் குற்றி அரிசியாக்கி, அந்த அரிசியைக் கிணற்றிலுள்ள உவரியான ஊற்று நீரை முகந்துகொண்டு பழைய சிதைந்த வாயுடைய பானையில் ஊற்றி, உலையாக அடுப்பில் வைத்துச்சமைத்த சோறு என

உரைக்கப்படுகின்றது. மேலும்,

**“அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்**
**தோடி மாண் உலக்கை பரூஉக் குற்று அரிசி**
**காடி வெள் உலைக் கொளீஇ நீழல்**
**ஓங்கு சினை மாவின் தீம்கனி நறும்புள்.......” (புறம் - 399)**

என வரும் ஐயூர் முடவனார் பாடலில், சமையல் செய்யும் பெண் ஒருத்தி அளக்காமல் முகந்து எடுத்த வெண்ணெல்லை, உரலில் போட்டு உலக்கையில் குற்றி அரிசியாக மாற்றியெடுத்து அவ்வரிசியைப் புளித்த தண்ணீரால் ஆன உலைப்பானையில் போட்டு மேலும் அதனுடன் மாம்பழத்தின் புளித்தசாறு ஊற்றிப்புளிசாதம் செய்த முறைமை குறிப்பிடப்பட்டுள்ளது. நெல்லிலிருந்து பெறப்படும் அரிசி மட்டுமல்லாது ஈந்து எனப்படும் பேரீச்சை விதை போன்ற சிவந்த அவிழால் செய்யப்படும் சோற்றைப்பற்றி,

**“களர் வளர் ஈந்தின் காழ்கண் டன்ன**
**சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி......” (பெரும்பாணாற்றுப்படை 130 – 131)**

எனவும், நெடுங்கொத்தையுடைய பூளைப்பூப்போன்ற வரகினது சிறிய அவிழாகிய சோற்றை,
“நெடுங்குரல் பூளைப்பூவின் அன்ன
**குறுந்தாள் வரகின் குறள வீழ்ச் சொன்றி......” (மேலது – 192 – 193)**

எனவும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் சோறு பற்றிய தகவல்களைப் பதிவு செய்துள்ளார். புளியோடு கலந்து பசுவின் மோரை உலையாகவைத்து, அவ்வுலையில் மூங்கிலின் முற்றிய அரிசியைப் போட்டுக் காடெல்லாம் மணக்குமாறு குறமகள் ஒருத்தி உணவு சமைத்ததை,

**“இன்புளிக் கலந்து மாமோர் ஆகக்**
**கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து**
**வழையமை சாரல் கமழத் துழை,**
**நறுமலர் அணிந்த நாறிரு முச்சித்**
**குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி.....” (மலைபடுகடாம் - 179-183)**

எனப் பெருங் கௌசிகனார் பாடியுள்ளார். மனிதர்களுக்கு மட்டுமல்லாது பறவைகள், விலங்குகள் போன்றவைகளுக்கும் தாவரங்கள் உணவாகியுள்ள செய்தியினையும் சங்கச்சான்றோர் பாடல்களின் வழி கூறியுள்ளனர். ஓமை என்னும் மரத்தின் பட்டையை உரித்து உண்ணும் வழக்கம் உடையன யானைகள் என்பதை,

**“கான யானை தோல் நயந்து உண்ட**
**பொரிதான் ஓமை.....” (குறுந்தொகை – 79)**

எனவும், வேப்பம் பழத்தைத் தின்று திளைத்த வௌவால்கள் இருப்பை மரம் நோக்கி பறக்கின்றனவாம், எதற்கெனில் வேம்பினும் இனிய தீஞ்சுவைக் கனியைப்பெறுவதற்காக என்பதனை,

**“வேம்பின் ஒண்பழம் முனை, இருப்பைத்**
**தேம்பால் செற்ற தீம்பழம் நசை,**
**வைகுபணி உழந்த வாவல்....” (நற்றிணை – 279)**

எனவும், கயமானார் குறிப்பிட்டுள்ளார். வயலருகே ஒரு மாமரம். அதிலே கனிகள் முதிர்ந்து பழுத்துள்ளன. முதிர்ச்சி காரணமாக அக்கனிகள் உதிர்கின்றன. உதிர்ந்து கழனி நீரில் விழுகின்ற அம்மாங்கனிகளை வயலிலுள்ள வாளை மீன்கள் உண்ணுகின்றன என்னும் அழகிய ஓவியத்தை,

**“கழனி மாத்து விளைந்துஉகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்.....” (குறுந்தொகை – 8)**

எனக் கண்முன்னே காட்சியாக்குகின்றார். ஆலங்குடி வங்கனார்.

**“நிரை பறைக்குரீஇயினம் காலைப்போகி**
**முடங்கு புறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு.....” (அகநானூறு – 303)**

என வரும் ஔவையாரின் பாடல் வரிகள், காலைப்பொழுதில் தன் உணவாகிய நெல்லைத் தேடிப்பறக்கும் பறவைகளின் கூட்டம் பற்றி எடுத்தியம்புகின்றன. பயிரினங்கள் பல வகைகளில் மனிதனுக்கும், பறவை மற்றும் விலங்கினத்திற்கும் உணவாய் விளங்குகின்றன.

**உடை**

சங்க காலத்தில் உணவாக மட்டுமல்லாது, உடையாகவும் பயிரினங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயிரினத்தால் ஆன உடைகளைத் தழை ஆடைகள் என வழங்கினர். இத்தழை ஆடைகளைப் பெண்கள் அணிந்ததாகச் சங்கப்புலவர்கள் சுட்டிச் செல்கின்றனர்.

**“தழையும், கோதையும் இழையும் என்றிவை**
**தைஇயினிர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்**
**மடமொழி ஆயத்தவருள்.....” (கலித்தொகை – 102)**

என வரும் சோழன் நல்லுருக்தினாரின் பாடல், சிறுமியர் விளையாடும் காட்சியினைச் சுட்டுகின்றது. சிறுமியர்கள் பல்வகையான மலர்களைப் பறித்து மாலைகள் ஆக்கி, அம்மாலையினையும், இலைத்தழையினையும் இணைத்து நெருக்கமாகத் தைத்து ஆடையாக்கி அணிந்திருந்தனராம் என்பதன் வழி தழையாடை பற்றிய தகவல் கிடைக்கப்பெறுகின்றது.

**“வயல்வெள் ஆம்பல் உருவநெறித் தழை**
**ஐது அகல் அல்குல் அணிபெறத் தைஇ**
**விழவின் செலீஇயர் வேண்டும் மன்னோ.....” (நற்றிணை – 390)**

என வரும் ஔவையாரின் பாடல் வரிகளில், ஆம்பல் தழையால் ஆன உடையைக் கட்டிக்கொண்டு விழாவிற்குச் செல்ல வேண்டும் எனத் தலைவி ஒருத்தி உரைப்பதாய் அமைந்துள்ளது. இதன் வழி சங்க காலத்தில் தழை உடை உடுத்துவதே சிறப்பானதாகக் கருதப்பட்டு இருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. தற்போது விழாக்களில் பட்டாடை உடுத்துவது சிறப்புடையதாய்க் கருதப்படுவது போல, அக்காலத்தே தழை ஆடைகள் உடுத்துவது சிறப்பானதாய்க் கருதப்பட்டிருக்கின்றது.

தழை ஆடைளை நெய்தல், ஞாழல், ஆம்பல், குவளை, நொச்சி போன்றவற்றின் தழைகளைக் கொண்டு உருவாக்கி அணிந்தனர் சங்ககாலப் பெண்கள் என்பதனை,

**“சிறுகரு நெய்தல் கண்போல் மாமலர்ப்**
**பெருந்தண் மாத்தழை யிருந்த அல்குல்......” (கலித்தொகை – 130)**

என நல்லந்துவனாரும்,

**“கானல் ஞாழற் கவின் பெரு தழை...” (ஐங்குறுநூறு – 191)**

என அம்மூவனாரும்,

**“அளிய தாமே சிறுவெள் ஆம்பல்**
**இளைய மாகத் தாழை ஆயினவே....” (புறநானூறு – 248)**

என ஒக்கூர் மாசாத்தனாரும்,

**“பைந்தழை மா மகளிரொடு........” (பட்டினப்பாலை – 91)**

எனப் பசுமையான தழைகளை அணிந்த அழகிய பெண்கள் என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் தம் பாடல்களில் சுட்டிக் காட்டுகின்றனர்.

**உறைவிடம்**

உறைவிடம் என்பது பாதுகாப்பான ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆதிமனிதன்

மரப்பொந்துகளிலும், மலைக் குகைகளிலும் வாழ்ந்தான் என்பர். இவ்வுலகில் வாழும் மனிதர்களுக்கும், பறவைகளுக்கும் உறைவிடமாய்த் தாவரங்கள் விளங்குகின்றன. இதில் பெரும்பான்மை பறவைகளுக்கு எனலாம். நொச்சி மரத்தில் தங்கியுள்ள புறா தன் இணையினை அழைப்பதனை,

**“மயில அன்ன மாக்குரல் நொச்சி**
**எரிசினத் தணிந்த இலையில் அஞ்சினை**
**வரிப்புறப் புறவின் புலம்பு கொள் தெள்விளி......” (நற்றிணை – 279)**

எனக்கயமனார் கூறுகின்றார். ஆலமரத்தில பறவைகள் தங்கியிருந்த செய்தியினை,

**“கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்துக்**
**கூடு இயத்து அன்ன குரல் புணர் புள்ளின;....” (மலைபடுகடாம் - 268-269)**

எனப் பெரும் கௌசிகனாரும் எடுத்துரைக்கின்றார். ஆலங்குடி வங்கனார், தரையகத்தில் உள்ள மருத மரக்து நிழலிலே தங்குகின்ற எருமையினை,

**“ தட மருப்பு எருமைப் பிணர்ச் சுவல்இரும்போத்து**
**முடநடை நாரைப் பல்இனம் இரிய**
**நெடு நீர்த் தண்கயம் துடுமெனப் பாய்ந்து**
**நாட்டொழில் வருத்தம் வீட சேண் சினை**
**இருள் புனை மருதின் இன்நிழல் வதியும;....” (நற்றினை – 330)**

என்றுரைக்கின்றார். ஓமை மரத்தின் பெரிய கிளை ஒன்றில் பெண்பருந்து கூடுகட்டி, தன்கூட்டில் குஞ்சு பொரித்தருந்ததனை,

**“கருங்கால் ஓமைக் காண்புஇன் பெருஞ்சினைக்**
**கடியுடை நணந்தலை ஈண்று இளைப்பட்ட**
**கொடுவாய்ப் பேடைக்கு அல்குஇரைதரீஇய....” (அகநானூறு – 3)**

என இளங்கீரனார் கூறுகின்றார்.

**“கருங்கோட்டுப் புன்னைக் குடக்குவாங்கு பெருஞ்சினை**
**விருந்தின் வெண்குருகு.....” (நற்றிணை – 267)**

எனக் கபிலர் ஓர் இயற்கை வருணனையைக் காட்சி ஆக்குகின்றார். கருத்த புன்னை மரக்கிளையில் விருந்தாக ஒரு வெண்குருகு வந்து அமர்கின்றதாம். மரத்தின் கிளைக்குப் புதிதாக வந்து விருந்தென்று குறிப்பிடுவதன் வழி, பறவையை விருந்தினராக்கி, மரத்தை இல்லமாக்கி அழகுற உரைத்துள்ள புலவரின் கவிதைத்திறம் போற்றுவதற்குரியதாகும். மரங்கள் பெரும்பாலும் பறவைகளின் இருப்பிடமாய்த் திகழ்வதைச் சங்கப்புலவர்கள் நயம்படச் சுட்டிச்செல்கின்றனர்.

**வாசனைப் பொருட்கள்**

வாசனைத்திரவியங்களாய் தாவரங்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. உடம்பிலும், உடைகளிலும் மட்டுமல்லாது கூந்தலுக்கும், நறுமணப் பொருள்கள் பூசும் பழக்கம் தமிழரிடையே சங்க காலந்தொட்டே இருந்து வந்திருப்பதை இலக்கியச் சான்றுகள் வழி அறியமுடிகின்றது.

**“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ!**
**பயிலியது கெழீஇய நட்பின் மயில் இயல்**
**செறி எயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீ அறியும் பூவே !” (குறுந்தொகை – 2)**

என வரும் இறையனார் பாடலின் பொருள், வாசனைப் பொருட்களை அடிப்படையில்கொண்டு

அமைகின்றது. 'தலைவியின் கூந்தல் நறுமணத்தை விடச்சிறந்த நறுமணம் கொண்ட பூவினை நீ கண்டது உண்டா? எனத் தும்பி எனும் உயர்சாதி வண்டிடம் கேட்கின்றார் புலவர். அக்காலத்தில் பெண்கள் செயற்கையாக நறுமணப் பொருட்களைப் பூசி தம் கூந்தலுக்கு நறுமணம் சேர்த்துள்ளனர் எனும் செய்தியினை இப்பாடல் உணர்த்துகின்றது.

**"விதி ஆற்றான் ஆக்கிய மெய்க்கலவை போலப்**
**பொது நாற்றம் உள்கரந்து புதுநாற்றம்**
**செய்கின்றன்றே செம்பூம் புனல;....."** **(பரிபாடல் - 7-17)**

என்ற மையோடக் கோவனாரின் பாடல் வரிகள், வையை ஆற்றில் புதுப்புனல் பெருகி வரும்போது பொதுநாற்றம் கொண்டு வருகின்றது அந்த நாற்றத்துடன், அப்புனலில் நீராடும் ஆண்களும், பெண்களும் பயன்படுத்தும் நறுமணப் பொருட்களின் வாசனையும் இணைந்து பல்வகையான நறுமணங்களாக வீசுகின்றன என்பதைச் சுட்டுகின்றன.

சங்ககால ஆண்கள் தங்கள் மார்புகளில் சந்தனம் பூசிக்கொள்ளும் வழக்கமுடையவர்களாக இருந்திருக்கின்றனர். முருகனை வழிபடும் குறவர்கள் தங்கள் மார்புகளில் சந்தனம், அணிந்திருந்ததை,

**"நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பன;."** **(திருமுருகாற்றுப்படை – 193)**

என நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

மேலும், தனது தலைவனின் மார்பில் சந்தனம் கிதழ்ந்ததை,

**"நறுஞ் சாந்து அணிந்த கேழ்கிளர் அகலம;..."** **(அகநானூறு – 26)**

எனத் தலைவி ஒருத்தி கூறுவதாகப் பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப்பெருவழுதி குறிப்பிடுகின்றார்.

உடம்பிற்கு மட்டுமல்லாது, தங்களின் ஆடைகளுக்கும் நறுமணம் பூசினர் சங்க கால மக்கள்,

**"நல்நெடுங் கூந்தல் நறுவிரகுடைய**
**நரந்தம் அரைப்ப நறுஞ்சாந்து மறுக**
**மென்னூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப...."** **(மதுரைக்காஞ்சி – 552)**

என வரும் மாங்குடி மருதனாரின் பாடல் வரிகள், பெண்கள் கூந்தலுக்கு மட்டுமல்லாது தங்களின் ஆடைகளுக்கும் நறுமணம் பூசிக்கொண்ட நிகழ்வைத் தெரிவிக்கின்றன.

**மருந்துப்பொருட்கள்**

'உணவே மருந்து' என்பது பழமொழி. நாம் உண்கின்ற உணவு தான் நமக்கு ஆற்றலாகவும், மருந்தாகவும் செயல்பட்டு நம் உடலைக் காக்கின்றது. இதனை நன்கறிந்த திருவள்ளுவர் 'மருந்து' எனும் அதிகாரம் அமைத்து உணவினையும், பிணியினையும் பற்றி நயம்படக் கூறியுள்ளார்.

மனிதர்களின் பேய் குறித்த நம்பிக்கை சங்ககாலத்திலிருந்தே இருந்திருக்கின்றது. பேய்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள சங்கத்தமிழர்கள் பயன்படுத்திய மருந்துப்பொருட்கள் தான் ஐயவி ஆகும். வெண்சிறுகடுகு அல்லது சிறுவெண்கடுகு என்பதைத்தான் சங்கத் தமிழர்கள் ஐயவி என்று அழைத்தனர்.

வீட்டில் குழந்தை பிறந்தால், அக்குழந்தையைப் பேயிடமிருந்து காக்க வீடு முழுவதும் நெய்யோடு ஐயவி எனப்படும் வெண்சிறுகடுகைக் கலந்து பூசுவது சங்க காலத்தில் மரபாகவே இருந்திருக்கின்றது.

**“கடும்புடைக் கடுஞ்சூழ் நம்குடிக்கு உதவி**
**நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்**
**விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள;....” (நற்றினை- 370)**

‘நம்குடி சிறக்க ஒரு புதிய மகவை ஈன்று, நெய்யோடு கலந்து ஒளிர்கின்ற வெண்சிறுகடுகின் திரண்ட விதைகளை வீடெங்கும் பூசி, அயர்ந்து தூங்கிக்கொண்டு இருக்கின்றாள்’ என்று ஒரு தலைவன் தன் தலைவி மகவீன்ற பெருமையைப் புகழ்வதாய் உறையூர்க்கதுவாய்ச் சாத்தனார் உரைக்கின்றார்.

ஐயவி எனப்படும் வெண்சிறு கடுகு, மக்களைப் பேய்களிடமிருந்து மட்டுமல்லாது பகைவர்களிடமிருந்தும் காக்கும் என்கின்ற நம்பிக்கையை,

**“ கைவல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்த்து**
**ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை**
**வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக**
**குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில;....” (நெடுநல்வாடை – 86)**

என நக்கீரர் தம் பாடலில் கூறுகின்றார். பொதுவாக வாயில்களில் வெற்றித் தெய்வம் உறைவதாக நம்பிக்கை உண்டு. அவற்றிற்கு நெய்யும் வெண்சிறு கடுகும் இட்டு வழிபடும் மரபு அக்காலத்தில் இருந்திருக்கின்றது. நெய்யும், ஐயவியும் தெய்வங்களால் விரும்பப்படுவன. இதனைத் திருமுருகாற்றுப்படையில், “நெய்யோடு ஐயவி அப்பி” (228) என, குறமகளிர் முருகனை வழிபட்ட செய்தியினை நக்கீரர் கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது.

அதியமான் அரிய நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்தான். அந்நெல்லியும் ஆயுள் விருத்தி தரும் மருந்துப் பொருளாய்க் குறிப்பிடப்படுகின்றது. அதியன் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல், ஔவை உண்டால் தமிழ்மொழி வளரும் என எண்ணி ஔவைக்குக் கொடுத்தான். இங்கே நெல்லிக்கனியும் அரிய மருந்துப் பொருளாகின்றது. இதனை,

**“பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே......” (புறநானூறு – 91)**

என வரும் ஔவையாரின் பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

**எரிபொருள்**

நொய்ய மரத்தின் விறகால் ஆன கடை கொள்ளியை எரித்துப் பனி நீங்கும்படி செய்து எல்லோரும் இனிது உறங்கி வைகறையில் புறப்பட்டுச் செல்லுங்கள் என்பதை,

**“நொய்ம்மர விறகின் நெகிழி மாட்டிப்**
**பனிகேண் நீங்க இனிதுடன் துஞ்சிப்**
**புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின;...” (மலைப்படு கடாம் 446-448)**

என வரும் பெருங்கௌசிகனார் பாடல் வரிகளின் வழி, பயிரினங்களின் விறகாகப் பயன்பட்டமையைப் பதிவு செய்கின்றார். மேலும், நல்லூர் நத்தத்தனாரும்,

**“வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்’**
**கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள;......” (சிறுபாணாற்றுப்படை 155-156)**

என அகில் மரக்கட்டைகள் விறகானதைப் பதிவு செய்கின்றார்.

**புல்வேய்ந்த குடில்**

சங்ககால மக்கள் தங்களின் வீடுகளின் மேற்கூரையைச் சில வகையான புல் செடிகளைக்கொண்டு வேய்ந்திருந்ததனை,

**“அகலுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய**
**புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்;....”** **(மலைப்படுகடாம் 438-439)**

எனப் பெருங் கௌசிகனார் சுட்டுகின்றார்.

**கயிறு**

தாழையின் விழுதுகள் ஊஞ்சலாடும் கயிற்றுக்குப் பயன்பட்டதனை,

**“தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி**
**கொண்டல் இடுமணல் குரவை முனையின;....”** **(அகநானூறு – 20)**

என உலோச்சனார் குறிப்பிடுகின்றார். வடம வண்ணக்கன் பேரி சாத்தனாரும் செயலை எனும் மரத்தில் ஊஞ்சல் கட்டி பெண்கள் விளையாடி மகிழ்ந்ததை,

**“வந்தனன் ஆயின் அம்தளிர்ச் செயலைத்**
**தாழ்வு இல் ஓங்கு சினைத்தொடுத்த வீழ்கயிற்று**
**ஊசல் மாறிய மருங்கும் பாய்பு உடன;...”** **(அகநானூறு – 38)**
**என்றுரைக்கின்றார்.**

**இலை மற்றும் தொன்னை**

**“தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ நும்**
**பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவீர்;....”** **(பெரும்பாணாற்றுப்படை – 104-105)**

எனவரும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடல் வரிகளில் தேக்கிலையில் தெய்வத்திற்குப் பலிச்சோறு வைக்கும் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் வழி தேக்கிலை உணவு பரிமாறும் கலமாகப் பயன்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

**இறுவாய்**

இயற்கையின் முதன்மைப் பொருளான பயிரினங்களைப் பண்டைத் தமிழர்கள், அவற்றின் தன்மை உணர்ந்து பயன்படுத்தியுள்ளனர். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடத்திற்கு மட்டுமல்லாது, வாசனைப்பொருட்களாகவும், மருந்துப்பொருளாகவும், கயிறாகவும், எரிபொருளாகவும் எனப் பல்வகையான வகைகளில் பயிரினங்களைத் தம் தேவைகளுக்குப் பயன்படுத்தினர் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாய் அமைகின்றன. இயற்கையில் கிடைக்கும் பயிரினப் பொருட்களைப் பயன்படுத்தி வாழ்ந்ததால்தான், பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து இருந்தனர் எனப்படுகின்றனர்.

**துணை நூல் பட்டியல்**

1. எட்டுத்தொகை நூல்கள்.
2. பத்துப் பாட்டு.
3. தமிழண்ணல், குறுந்தொகை அரும்புகள்.
4. வரதராசனார். மு, பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை.
5. வரதராசனார். மு, ஓவச்செய்தி.
6. மாணிக்கம், வ. சுப, தமிழ்க்காதல்.